**Dated : 06.03.2026**

**O.S.No. 264/2024**

**DW.5 – திருமதி. ஜெயலட்சுமி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் எனக்கு ஞாபகமில்லை. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நான் மூத்தவர் என்றால் சரிதான். கலைசெல்வி வழக்கு போட்ட விவரம் எனக்கு அப்போதே தெரியுமா என்றால் எனக்கு அப்போது அந்த விவரம் தெரியாது, சில நாட்கள் கழித்து தான் அந்த விவரம் தெரிந்தது. நான் எனது வழக்கறிஞர் மூலமாக இந்த வழக்கில் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் பெயரை தற்போது மறந்துவிட்டேன். எனக்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கறிஞர் ஏற்பாடு செய்து கொடுத்து அவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் தான் நான் பதில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் தான் எனக்கு திருமணம் செய்துக்கொடுத்தார் என்றால் சரிதான். கலைசெல்விக்கும் அவர்கள் தான் திருமணம் செய்தார்கள். கலைசெல்விக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் சில வருடங்கள் ஆனதால் ஞாபகமில்லை. இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்துமே என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய தகப்பனார் சிப்பாய் முனுசாமி என் தகப்பனாருக்கு பாகமாக சொத்துக்களை கொடுத்ததாக நான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆகவே என்னுடைய பதிலில் என்னுடைய தகப்பனார் சம்பாதித்த சொத்து என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் அது என் தாத்தா சம்பாதித்த சொத்து தான். எந்த மண்டபத்தில் வாதி கலைசெல்விக்கு திருமணம் நடந்தது என்றால் எந்த மண்டபம் என்று தெரியவில்லை, ஆனால் காவேரிப்பட்டிணத்தில் திருமணம் நடந்தது. அவருக்கு நடந்த திருமணம் காதல் திருமணமா என்றால் காதலித்தார்கள், அதனால் பெற்றோர்கள் திருமணம் செய்துவைத்தார்கள். என்னுடைய சகோதரி காதல் திருமணம் செய்துக்கொண்டதால் என் பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும் இடையே சுமூகமான உறவில்லை என்றால் சரியல்ல, எல்லோரும் சேர்ந்து தான் திருமணம் செய்துவைத்தார்கள். நான் தற்போது பிரமாண வாக்குமூலத்தில் கூறியிருப்பது நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை, வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும்.

என் தகப்பனாரும், சகோதரர்களும் பதில் கொடுத்திருக்கின்ற விவரம் எனக்கு தெரியும். தற்போது வழக்கில் தாக்கல் செய்துள்ள 3 தானசெட்டில்மெண்ட் தவிர வேறு எந்த சொத்துக்களும் எங்கள் குடும்பத்தில் இல்லை என்று தான் வழக்காடி வருகிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போதே கந்தசாமி என்பவர் பெயரில் ஒரு பத்திரம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் பதிலில் சொல்லியிருக்கும் விவரமும், தற்போது வாக்குமூலத்தில் சொல்லியிருக்கும் விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரர்கள் கூறியதன் அடிப்படையில் பதில் தாக்கல் செய்து, இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :**

எனக்கு எத்தனை வருடங்களுக்கு முன்னர் திருமணம் ஆனது என்றால் 45 வருடங்களுக்கு முன்பு திருமணம் ஆனது. என்னுடைய சகோதரிக்கு 25 வருடங்களுக்கு முன்னர் திருமணம் ஆனது.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.